மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 357, திரு. பி. வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் *358*- திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

358—

திருத்தணி நகரில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குதல்

***9969**—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்தின் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க தற்போது குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். திருத்தணி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடப்பாண்டு விலைப்பட்டியலின்படி ரூ.273.50 இலட்சங்களுக்கு மதிப்பீடு திருத்தி வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. அரசின் ஆட்சி ஒப்புதலுக்குப் பின் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகர் ஒரு தொன்மைவாய்ந்த யாத்ரிகர்கள் திருத்தலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தற்போது இங்கு குடிநீர்ப் பஞ்சம் கடுமையான நிலையில் இருக்கிற காரணத்தால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் ஒரு பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற, எங்களுடைய இதயதெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், புனித தாய், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தற்போது எடுக்கப்பட்டிருக்கிற அந்தக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி, வருகிற நிதியாண்டிலேயே சேர்த்து, அதை முடித்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காக

நடப்பாண்டில் திட்ட மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்திய மதிப்பீடு பேரூராட்சிகளுடைய இயக்குநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தாலும், பேரூராட்சிகள் இயக்குநர் அதற்கான நிதிநிலைச் சான்றுகளை கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலும், அவரிடமிருந்து விரைவாக அந்த நிதிநிலைச் சான்றுகளைப் பெற்று, இந்தத் திட்டத்திற்கான அனைத்து ஒப்புதல்களும் வழங்கப்பட்டு, இதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டத்தினுடைய பணிகள் எல்லாம் நிறைவுபெற்ற தருவாயில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் தந்து, தற்போது நிதியாதாரத்திற்காக அரசிடம் ஒப்புதல் பெறுவதற்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக செய்தி வரப் பெற்றேன். எனவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் நிதியாதாரத்திற்காக தற்போது என்ன வழிவகை செய்யப்போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஒப்புதல் வாரியத்தில் வழங்கப்பட்டு, இன்றைக்கு அரசின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கான நீராதாரம் அருங்குளம் அருகிலுள்ள கொசஸ்தலை ஆற்றில் அமைப்பதற்கான திட்டத்தை, ஆய்வுப் பணியை, இன்றைக்கு வாரியம் மேற்கொள்ள இருக்கிற காரணத்தாலும், அதிக மக்கள் தொகையை கொண்டிருக்கிற திருத்தணி நகரத்திற்கு இந்தத் திருத்திய மதிப்பீடு தேவை என்ற காரணத்தாலும், இன்றைக்கு தற்போதைய விலை பட்டியலின்படி ரூ. 273.50 இலட்சத்திற்கு திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் திருத்திய மதிப்பீடுகளுக்கு அரசினுடைய ஒப்புதல் பெறப்பெற்றபின், இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 ஆண்டுக்காலத்தில் முடிக்கும்வண்ணம் திட்டமிடப் பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன், வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 359. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.